**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 106/2011 (வாசா. 1 – வெங்கடேஷ் ) தேதி: 10.02.2026.**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

தாவா 1வது தபசில் சொத்து தற்சமயம் நகரளவை ஆவணங்களில் சர்வே எண் 56/1 ல் உள்ளது. அதற்கு முன்பு டவுன் சர்வே எண் 56 ல் அமைந்திருந்தது. அவ்வாறு முன்பு டவுன் சர்வே எண் 56 ல் அமைந்திருந்தது சம்பந்தமாக நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தை எனது முன்னோர்கள் அனுபவம் செய்து வந்ததை காட்டும் தீர்வை ரசீது போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. எனது பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், இந்த வழக்கு நிலுவையின் போது தாவா 1வது தபசில் சொத்தை எனது மைத்துனர் ராஜேஷ் கண்ணனுக்கு கிரையம் கொடுத்துள்ளதால் அவர் செலுத்திய தீர்வை ரசீதுகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியான பிராது 2ம் தபசில் சொத்தின் தேக்கு மரங்கள் இருப்பதாகவும் அதை வெட்டி அகற்றி காலி சுவாதினம் வழங்க

பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி தற்பொழுது அந்த சொத்தில் வேப்ப மரங்களும் இருப்பதாக கூறுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.